செ.வெ.எண்: 650/2016 நாள்: 20.09.2016

**பத்திரிக்கை செய்தி**

**கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்கள் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கல்குளம் வட்டாட்சியர் திருமதி. தா. புவனேஸ்வரி தகவல்**

**கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்திலுள்ள பின்வரும் வருவாய் கிராமங்களில் காலியாக உள்ள 3 கிராம உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளன.**

**இந்த பணியிடங்கள் 1. மணவாளக்குறிச்சி கிராமம்- ஆதிதிராவிடர் (முன்னுரிமையற்றவர் - பெண்கள்) = 1 பணியிடமும், 2. குளச்சல் அ கிராமம் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை) = 1 பணியிடமும், 3. கப்பியறை ஆ கிராமம் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் நீங்கலாக ___ முன்னுரிமையற்றவர்) - 1 பணியிடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்குளம் வட்டத்தைச் சேர்ந்த அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள இனசுழற்சியினை சார்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**இந்த பதவிக்கு விண்ணப்பிக்க குறைந்த பட்சம் சைக்கிள் ஓட்டத்தெரிந்தவரும், தமிழில் எழுதப்படிக்க தெரிந்த 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். 01.07.2016 அன்று குறைந்தபட்ச வயது 21 ஆகவும், அதிகபட்ச வயது வரம்பு என்பது தாழ்த்தப்பட்டோர் எனில் 35-ம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எனில், 32-ம் ஆகும்.**

**விண்ணப்பங்கள் அனைத்தும் வெள்ளை தாளில் தட்டச்சு செய்யப்பட்டு மேற்காணும் தகுதிகளை நிரூபிக்கும் ஆவணங்களுடன் நேரிலோ பதிவு தபால் மூலமாகவோ, கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 30.09.2016 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்கும்படி மனு செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**வட்டாட்சியர்,**
**கல்குளம்.**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.